தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத் தொடர்.

செவ்வாய்க்கிழமை, 1984 பிப்ரவரி 14.

மாசி 2, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 11.00 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

1. இரங்கற் குறிப்பு.

சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பஷிர் அகமது சையீத் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, சட்டமன்ற மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. பஷிர் அகமது சையீத் அவர்கள் சென்னையில் 7—2—1984 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 1926 முதல் 1937 வரை உறுப்பினராகவும், மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 1937 முதல் 1946 வரை உறுப்பினராகவும் இருந்தார்.

இவர் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகவும், சென்னை மாநகராட்சிக் குழுவில் உறுப்பினராகவும் இருந்து திறம்பட பணியாற்றினார். தென்னிந்திய கல்விக் குழுவைத் தோற்றுவித்து, பல கல்லூரிகளை நிறுவி, கல்வித் துறையில் அரும்பாடுபட்டவர். சென்னை மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் பேரவைகளில் பல வருடங்கள் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர். அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகத்தில் உறுப்பினராகப் பல ஆண்டுகளும், மற்றும் ஜம்மு மற்றும் காஷ்மீர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகவும் இருந்தார்.

சட்ட முன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர் திரு. பஷீர் அகமது சையீத் அவர்களின் மறைவு குறித்து

[மாண்புமிகு மேலவைத் தலைவர்] [1984 பிப்ரவரி 14

அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்திற்கு நமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னாரது மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கோள்கிறேன்.

(அவை உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.)

2. இரங்கல் தீர்மானம்.

சோவியத் ஒன்றியக் குடியரசுத் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களே, சோவியத் ஒன்றியக் குடியரசின் தலைவர் திரு. ஆண்ட்ரபோவ் அவர்கள் 9—2—1984 அன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்கள் அது குறித்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிவார்.

* **மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

சோவியத் ஒன்றியக் குடியரசின் தலைவர் திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் மறைந்தது குறித்து இந்த மன்றத்தின் சார்பிலும், தமிழக மக்களின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் நான் இந்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"1982 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் முதல், சோவியத் ஒன்றியக் குடியரசின் தலைவராக இருந்துவந்த திரு. யூரி விளாடிமிரோவிச் ஆண்ட்ரபோவ் அவர்கள் 1984 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 9 ஆம் நாள் மறைந்தமை குறித்து இம்மேலவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஆண்ட்ரபோவ் சிறந்த அரசியல் வல்லுநர், அணு ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகளுக்காக அவர் உலகத்தாரால் என்றென்றும் போற்றப்படுபவர். அவர் இந்திய-சோவியத்